செ.வெ.எண்: 41 நாள்: 22.01.2018

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.01.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து விலையில்லா வீட்டுமனைப் பட்டா கோரி 21 மனுக்களும், பட்டா மாறுதல் கோரி 15 மனுக்களும், குடும்ப அட்டை தொடர்பாக 7 மனுக்களும், காவல்துறை நடவடிக்கை கோரி 23 மனுக்களும், வேலைவாய்ப்பு கோரி 17 மனுக்களும், விலையில்லா தையல் இயந்திரம் வேண்டி 10 மனுக்களும், பசுமைவீடு, சாலைவசதி, குடிநீர்வசதி ஆகியவைகள் கோரி 15 மனுக்களும், முதியோர் உதவித்தொகை கோரி 30 மனுக்களும், ஆக்கிரமிப்பு அகற்றுதல் கோரி 15 மனுக்களும், இதர கோரிக்கைகள் தொடர்பாக 75 மனுக்களும் என மொத்தம் 228 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கினார்.

மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து மாதாந்திர உதவித்தொகை கோரி 5 மனுக்களும், அரசு வேலைவாய்ப்பு கோரி 1 மனுவும், நிலம் அளக்க கோரி 1 மனுவும், ஸ்கூட்டர் வழங்க கோரி 1 மனுவும், இலவச வீட்டுமனை பட்டா வழங்க கோரி 1 மனுவும், இதர கோரிக்கைகள் தொடர்பாக 5 மனுக்களும் என மொத்தம் 14 மனுக்களை பெற்று இம்மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**